# பாடம் 15 யோசேப்பு சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுதல் (ஆதி 40-41)

தேவன் இப்பொழுதும் அற்புதங்களைச் செய்கிறார்! தேவனுடைய அற்புதத்தின் நேரம் வருவதற்காய் காத்திருக்க கற்றுக் கொள்வதே உங்களின் சவாலாயிருக்கிறது. யோசேப்பு அவனுடைய அற்புதத்திற்காக அநேக நாள் காத்திருந்தான். அவனுடைய சிறுவயதின் விசேஷ கனவுகள் எங்கோ நினைவில் இருந்தன. சிறைச்சாலை வாழ்ககை அவனுக்கு மிகவும் கடினமாக இருந்தது. அவன் விசேஷ சிறையில் இருந்தாலும் தேவ கரம் அவனோடு இருந்ததினால் மிக மோசமான சூழ்நிலையிலிருந்து அவன் காக்கப்பட்டான்.

சிறைச்சாலை அதிகாரி யோசேப்புக்கு மரியாதை கொடுத்து அவனை தனக்கு உதவியாளராக பயன்படுத்தினான். வெகு விரைவிலேயே சிறைச்சாலை தலைவன் சிறை வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான். அங்கே அவர்கள் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் யோசேப்பு செய்வித்தான்.

ஒரு நாளிலே பார்வோன் தன் பான பாத்திரக்காரரின் தலைவனும், சுயம்பாகிகளின் தலைவனுமாகிய இரண்டு பிரதானிகளின் மேலும் கடுங்கோபங் கொண்டு அவர்களை சிறையிலே அடைத்தான். அங்கே அவர்கள் இருவரும் சொப்பனம் கண்டார்கள். யோசேப்பு அந்த சொப்பனம் என்ன?' என்று அவர்களிடம் கேட்டான்.

அதற்கு பானபாத்திரக்காரன் "என் சொப்பனத்திலே ஒரு திராட்சச் செடியிலே மூன்று கொடிகள் இருந்தது. அது துளிர்த்து பூக்கள் மலர்ந்து குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது. நான் அந்த பழங்களை பறித்து, பார்வோனுடைய பாத்திரத்திலே பிழிந்து, அதைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன்" என்றான்.

யோசேப்பு "அப்படியா அந்த மூன்று கொடிகளும் மூன்று நாட்கள், மூன்று நாளைக்குள்ளே பார்வோன் இந்த சிறைச்சாலையிலே இருந்து உன்னை விடுவித்து மறுபடியும் வேலையிலே சேர்த்துக் கொள்ளுவார். அப்பொழுது நீ என்மேல் தயவு வைத்து, என் காரியத்தை பார்வோனுக்கு அறிவித்து இந்த சிறைச்சாலையிலிந்து என்னை விடுதலையாக்க வேண்டும். ஏனென்றால் நான் எந்த தவறும்

செய்யவில்லை” என்றான். இதை கேட்ட பின்பு சுயம்பாகிகளின் தலைவன் தன்னுடைய சொப்பனத்தை சொல்ல தொடங்கினான். அவன் யோசேப்பிடம் “என்னுடைய தலையிலே மூன்று கூடைகள் இருந்தது. அதிலே சகலவித பலகாரங்களும் இருந்தது. அவைகளை பறவைகள் பறந்து வந்து பட்சித்தது” என்றான்.

அதற்கு யோசேப்பு “நல்லது, அந்த மூன்று கூடைகளும் மூன்று நாட்களாம். இன்னும் மூன்று நாளைக்குள்ளே உன்னை பார்வோன் இந்தச் சிறைச்சாலையிலே இருந்து விடுவித்து உன் தலையை மரத்திலே தூக்கிப் போடுவார். மரத்திலே தொங்குகிற உன் சரீரத்தை பறவைகள் தின்னும்” என்றான். யோசேப்பு முன்னறிவித்தபடியே இவைகள் நடந்தேறின. பார்வோன் பானபாத்திரக்காரனை அவன் ஸ்தானத்திலே இருத்தி, சுயம்பாகிகளின் தலைவனை மரத்திலே தூக்கிப் போட்டான். நீங்கள் நினைக்கலாம், அந்த பானபாத்திரக்காரன் பார்வோனிடத்திலே யோசேப்பு குறித்து சொல்லியிருக்கலாம் என்று. ஆனால் அவன் சொல்லவில்லை.

இரண்டு வருடங்களுக்கு பிறகு பார்வோன் இரண்டு சொப்பனங்களை கண்டான். முதல் சொப்பனத்திற்குப் பிறகு அவன் விழித்துக் கொண்டான். பின்பு மறுபடியும் நித்திரை செய்யும் போது இரண்டாம் சொப்பனத்தை கண்டான். இந்த முறை அவன் கலங்கினபடியால் மறுபடியும் நித்திரை கொள்ள முடியவில்லை. அதிகாலமே பார்வோன் தன்னுடைய ஆலோசனைக்காரரை வரவழைத்து இரண்டு சொப்பனத்தையும் சொன்னான்.

இந்த சொப்பனத்தின் அர்த்தம் என்ன? என்று தெரியாமல் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனடியாக பானபாத்திரகாரனுக்கு யோசேப்பின் நினைவு வந்தது. உடனே அவன் “பார்வோனே, நான் சிறைச்சாலையிலே இருந்தபோது சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லக்கூடிய எபிரேய பிள்ளையாண்டானை அங்கே பார்த்தேன்” என்றான். “காவலாளர்களே சீக்கிரமாய் சிறைச்சாலைக்கு போய் அந்த எபிரேயனை என்னிடத்தில் அழைத்து வாருங்கள்” என்று பார்வோன் ஆணையிட்டான்.

காவலாளிகள் சிறைச்சாலைக்கு விரைந்து வந்து யோசேப்பை கண்டார்கள். பார்வோனுக்கு முன்பாக அழைத்து வரப்படக் கூடிய

நல்ல நிலையிலே அவன் இல்லை. சிறைச்சாலையிலே இருப்பதினால் அவன் துணிகள் கிழிந்திருந்தது. அவன் குளித்து புதிய வஸ்திரம் தரித்தவனாய் எகிப்தின் அரசனான பார்வோனுக்கு முன்பாக கொண்டுவரப்பட்டான். எகிப்தானது பூமியிலே மிகப்பெரிய சாம்ராஜ்யமாக இருந்தது. பார்வோன் யோசேப்பை நோக்கி "கைதியே என் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்" என்று கட்டளையிட்டான்.

யோசேப்பு பிரதியுத்தரமாக "நான் அல்ல தேவனே நீர் தேடுகிற பதிலை அளிப்பார், உம்முடைய சொப்பனத்தை சொல்லும்" என கேட்டான். அப்பொழுது பார்வோன் தன்னை கலங்கப்பண்ணின முதலாவது சொப்பனத்தைச் சொன்னான். "அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள், நதியிலிருந்து ஏறி வந்து புல் மேய்ந்தது. பின்பாக இளைத்ததும் மகா அவலடசணமுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து வந்து, கொழுமையான முந்தின ஏழு பசுக்களையும் விழுங்கின. ஆனாலும் முன்பு இருந்தது போலவே அவைகள் இளைத்தும், அவலட்சனமுமாயிருந்தது.

என்னுடைய இரண்டாவது சொப்பனத்திலே, நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தன. பின்பு அதின் அருகிலே காய்ந்து போன ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து முளைத்தன. காய்ந்து போன கதிர்கள் கொழுமையான கதிர்களை விழுங்கிவிட்டன. அதன் பின்பும் அவைகள் முன்பு இருந்தது போலவே இருந்தன" என்றான்.

தேவன் தான் செய்யப் போகிறது இன்னதென்று பார்வோனுக்கு அறிவித்திருக்கிறார் என்று யோசேப்பு அறிந்து அதை சொல்ல ஆரம்பித்தான். "அந்த ஏழு நல்ல பசுக்களும், ஏழு நல்ல கதிர்களும் ஏழு பரிபூரணமான வருஷமாம். இந்த ஏழு வருடங்களிலே எகிப்திலே எங்கும் பரிபூரணமான விளைச்சல் உண்டாயிருக்கும். அதன் பிறகு பஞ்சமுள்ள ஏழு வருஷங்கள் உண்டாகும்.

அது நல்ல பரிபூரணமான விளைச்சல்களை மறந்து விடக்கூடிய கொடிய பஞ்சமாயிருக்கும். ஆகையால், ஞானமுள்ள ஒரு மனுஷனை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாக பார்வோன் ஏற்படுத்துவாராக. விசாரணைக்காரரை வைத்து பரிபூரணமான விளைச்சலுள்ள ஏழு

வருஷங்களின் விளைச்சலை சேர்த்து, பஞ்சமான வருஷங்களுக்காக பயன்படுத்த வேண்டும். இப்படிச் செய்யாதிருந்தால் தேசம் பஞ்சத்தினாலே அழிந்து விடும்” என்றான்.

பார்வோனும் அவன் ஊழியக்காரரும் சொப்பனத்தின் அர்த்தத்தைக் கேட்டு அதிர்ந்து போனார்கள். அப்பொழுது பார்வோன் தன்னுடைய ஊழியக்காரரை நோக்கி, “இந்த வேலைக்கு யோசேப்பை விட சிறந்த ஒருவனை கண்டுபிடிக்க முடியுமா? தேவ ஆவியானவர் அவனுக்குள் இருக்கிறார்” என்றான். பின்னர் பார்வோன் யோசேப்பை நோக்கி “எல்லா ஜனங்களும் உன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவார்கள். எனக்கடுத்த இரண்டாவது முக்கிய மனிதனாய் எகிப்திலே நீ இருப்பாய்” என்றான்.

இப்படியாக யோசேப்பு ஒரு கனப் பொழுதில் பார்வோனின் சிறைச்சாலையிலிருந்து கைதியாக வந்து முழு எகிப்திற்கும் அதிகாரமுடையவனாய் பார்வோனுக்கு அடுத்த இடத்திற்கு வந்தான். அடுத்த ஏழு வருடங்களில் யோசேப்பு அந்த இடங்களில் பயணம் செய்து தானியங்களை வசூலித்து சேகரித்தான். இது செழுமையான ஏழு வருடங்கள். யோசேப்புக்கு திருமணமாகி இரண்டு குமாராகள் பிறந்தார்கள். மூத்தவனுக்கு ‘மறக்கப்பண்ணினார்’ எனும் அர்த்தம் கொள்ளும்படி ‘மனாசே’ என்று பேரிட்டான். இளையவனுக்கு ‘இரண்டு மடங்கு பலுகப் பண்ணினார்’ எனும் அர்த்தம் கொள்ளும்படி ‘எப்பிராயீம்’ என்று பேரிட்டான்.

அவன் எந்த சூழ்நிலையிலும் தேவனால் எதையும் செய்ய முடியும் என்ற அவனுடைய விசுவாசத்தை இந்த பெயர்களின் மூலமாய் வெளிப்படுத்தினான்.

பின்பு தேவன் அவனுக்கு காண்பித்தபடியே பஞ்சமுள்ள ஏழு வருஷங்கள் ஆரம்பமாயின. இந்த பஞ்சமானது சுற்றிலுமுள்ள எல்லா தேசங்களையும் குறிப்பாக கானானையும் கூட பாதித்தது. எகிப்து தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால் யோசேப்பு களஞ்சியங்களை திறந்து எகிப்தியருக்கு விற்றான். சீக்கிரத்திலே சகல தேசத்தாரும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள். தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு அவர்களுடைய வருங்காலத்தைக் குறித்து அறிவிக்கிறார்.

தன்னுடைய வேலைக்காக அவர்களை எப்படி உபயோகிப்பார் என்பதை காண்பிப்பதினால் இந்த பாடம் முக்கியமானது. யோசேப்புக்கு ஏற்கனவே சொப்பனங்களை குறித்த அனுபவம் இருந்ததினால் அவனால் சொப்பனங்களின் மூலம் வரும் தேவ சத்தத்தை புரிந்து கொள்ள முடிந்தது. அவனுக்குத் தெரியும், அவனுடைய சொந்தக் கனவுகளும் நிறைவேறும் என்று.

பானபாத்திரக்காரனுடைய சொப்பனத்தினாலும் சுயம்பாகியின் சொப்பனத்தினாலும் பார்வோனுடைய சொப்பனத்தினாலும் தேவனுடைய திட்டங்கள் நிறைவேறுவதைக் கண்டான். இந்த பாடத்தின் முக்கிய சத்தியம் என்னவென்றால் தேவன் தன்னுடைய திட்டங்களுக்காக தேசங்களையும், குடும்பங்களையும் தனி மனிதர்களையும் கட்டுப்படுத்தி வழி நடத்துகிறார் என்பதே.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

1. பானபாத்திரக்காரனின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னவுடன், யோசேப்பு அவனிடத்தில் என்ன செய்யும்படி கேட்டான்? (6 வினாடிகள் காத்திருக்கவும்)

   ‘உன் விடுதலைக்குப் பிறகு என்னை நினைத்துக் கொள். இந்தச் சிறைச்சாலையிலிருந்து என்னை விடுவிக்கும்படி பார்வோனிடத்தில் கேள். சிறைச்சாலையில் அடைபட நான் ஒரு தவறும் செய்யவில்லை’ என கேட்டான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. யோசேப்பினிடத்தில், பார்வோனுடைய சொப்பனத்துக்கு அர்த்தம் சொல் என்று கேட்டபோது அவன் என்ன பதில் சொன்னான்? (6 வினாடிகள் காத்திருக்கவும்)

   ‘நான் அல்ல தேவனே பார்வோனுக்கு வேண்டிய பதிலை தருவார்’ என கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. வரப்போகிற பஞ்சங்களை எதிர்கொள்ள ஆயத்தங்களை செய்யும்படி ஏன் யோசேப்பு தெரிந்து கொள்ளப்பட்டான்? (6 வினாடிகள் காத்திருக்கவும்)

‘தேவனுடைய ஆவியானவர் அவனுக்குள் இருக்கிறார்’ என்று பார்வோன் அறிந்ததினால் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

4. வரப்போகிற பஞ்சகாலத்துக்கு ஆயத்தமாக யோசேப்பு என்ன செய்தான்? (6 வினாடிகள் தாமதிக்கவும்)

‘அடுத்த ஏழு வருடங்களிலே யோசேப்பு தேசமெங்கும் பிரயாணம் செய்து தானியங்களை வசூலித்து சேகரித்தான்’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தப் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இதுவரை கேட்டிராத ஒருவரிடம் இந்தப் பாடத்தை சொல்லிய பிறகு உங்களுடைய வருங்காலத்திலே நீங்கள் எதற்காக தேவனை நம்ப ஆயத்தமாய் இருக்கிறீர்கள் என்ற கேள்வியைக் கேளுங்கள். யோசேப்பு எப்படி எல்லா கனத்தையும் தேவனுக்கு கொடுத்தான் என்பதை குறித்து கலந்துரையாடுங்கள்.

பாடம் முடிந்தது